# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No.526/2024

Deposition of Witness for L.W.6 / P.W.4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஆறுமுகம் | Caste | : | |
| Father's Name | : | கிருஷ்ணசாமி | Occupation | : | பழக்கடை |
| Village | : | வலையக்காரவீதி | Religion | : | |
| Taluk | : | ஈரோடு | Age | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.07.2025**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது, ஈரோடு, வலையக்காரவீதியில் வசித்து கொண்டு, பழக்கடை வைத்து நடத்தி வருகிறேன். எனக்கு பாத்தியப்பட்ட வீடு ஒன்று சித்தோட்டில் உள்ளது. எனது வீட்டைப்பார்ப்பதற்காக நான் கடந்த 02.07.2019 அன்று மதியம் 12.45 மணி அளவில் என்னுடைய இருசக்கர வாகனத்தில் ஈரோட்டி - சித்தோடு சென்றுக்கொண்டிருந்தேன். Suzuki Showroom முன்பாக TN 56-8089 என்ற எண் கொண்ட Unicorn Bike ஒன்று சித்தோட்டில் இருந்து ஈரோடு நோக்கி வந்துக்கொண்டிருந்தது. மேற்படி இருசக்கர வாகனத்திற்கு பின்னால் 0077 என்ற எண் கொண்ட 407 நான்கு சக்கர வாகனம் வந்துக்கொண்டிருந்தது. Suzuki Showroom எதிரில் இருந்த இடைவெளியில் U-Turn செய்வதற்காக இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தவர், தனது வாகனத்தின் வேகத்தை குறைத்தார். அப்போது, பின்னால் வந்த 407 நான்கு சக்கர வாகனம், இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில், இருசக்கர வாகனம் சாய்ந்ததில் அதனை ஓட்டி வந்தவர், அங்கிருந்த Divider மீது சாய்ந்து கீழே விழுந்துவிட்டார். கீழே விழுந்ததில், அவருக்கு தலையிலும், இடது கண் கீழும், இரண்டு கால் முட்டியிலும் பலத்த காயம் ஏற்பட்டு, பேச்சு மூச்சு இல்லாமல் இருந்தார். நான் அருகில் இருந்த நபர்களை அழைத்து அந்த நபரை எடுத்து ஓரமாக இருந்த கடையின் முன்பாக படுக்க வைத்திருந்து பின்னிட்டு, போக்கு வண்டியில் ஈரோடு அரசு

மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். மருத்துவர் அவரை பரிசோதித்து, வரும் வழியிலேயே அவர் இறந்துவிட்டதாக தெரிவித்தார். விபத்தில் இறந்தவரிடம் போன் இருந்தது. அந்த போனை எடுத்து அதில் Owner என்று பதிவு செய்யப்பட்டிருந்த எண்ணிற்கு அழைத்து அந்த நபர் இறந்தவிபரத்தை அவரிடம் தெரிவித்துவிட்டேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**:

நான் நடத்தி வரும் பழக்கடை எங்கு உள்ளது என்றால், ஈரோடு மார்க்கெட்டில் உள்ளது. எனக்கு வாகனம் ஓட்டுவதற்கு முறையான உரிமம் உள்ளதா என்றால், இல்லை, நான் மாற்றுத்திறனாளி. ஈரோடு - சித்தோடு செல்வதற்கும், சித்தோடு - ஈரோடு வருவதற்கும் இரண்டு சாலைகள் உள்ளது என்றும், இரண்டு சாலைகளுக்கும் இடையில் குறைந்தது 3 அடி அகலம், மற்றும் 3 – 4 அடி உயரம் உள்ள தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டிருக்கிறது என்றால், சரிதான். அந்த தடுப்புச்சுவரின் மத்தியில் செடிகள் வைக்கப்பட்டுள்ளதா என்றால், இல்லை. ஈரோடு - சித்தோடு செல்லும்போது சாலையின் இடது புற ஓரத்தில் தான் செல்லவேண்டும் என்றால், சரிதான். அங்கு அமைக்கப்பட்டிருந்த சாலைகள் சுமார் 25 அடி அகலம் இருக்கும் என்றால், சரிதான். போலீஸ் என்னை விசாரித்தபோது, இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தவர் Indicator போட்டு திருப்பினாரா என்கிற விபரத்தை நான் விசாரணையில் சொல்லவில்லை என்றால், சரிதான். விபத்தில் இறந்துபோன நபர் தலைக்கவசம் அணிந்திருந்தார என்பதையும் குறிப்பிட்டு நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால், சரிதான். அவர் தலைக்கவசம் அணியவில்லை. நான் என்ன வண்டி ஓட்டிச்சென்றேன் என்றால், Suzuki Access. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இரண்டு சாலைகளிலும் வாகன போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால், சரிதான். நான் எனது வாகனத்தில் உட்கார்ந்து ஓட்டும் போது எனக்கு சாலையின் மத்தியில் உள்ள தடுப்புச்சுவரின் பின்னால் இருக்கும் ரோடு முழுமையாக தெரியாது என்றால், சரிதான். அன்றைய தினம் மேற்படி 407 நான்கு சக்கர வாகனத்தினை யார் ஓட்டிவந்தார்கள் என்கிற விபரத்தினையும் போலீசார் விசாரணையில் தெரிவிக்கவில்லை என்று சொன்னால், சரிதான். நான் சம்பவத்தை பார்த்ததாக சொல்லப்படும் சமயத்தில், சம்பவ இடத்தில் போக்குவரத்து நெரிசல் இருந்ததா என்றால், சரிதான். நான் அந்த இடத்தை விட்டு சென்ற பிறகும் எவ்வளவு நேரம் போக்குவரத்து நெரிசல் இருந்தது என்றால், எனக்கு தெரியா. நான் ஈரோட்டில் இருந்து சித்தோடு சென்ற சாலையில் போக்குவரத்து நெரிசல் இல்லை என்றால், சரிதான்.

நான் முதல் விசாரணையில் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் நான் சம்பவம் எதுவும் பார்க்கவில்லை என்றும், அன்றைய தினம் நான் யாருக்கும் கைபேசியில் இருந்து

தகவல் தெரிவிக்கவில்லை என்றும், நான் பழக்கடை நடத்தி வருவதால், எனக்கு போலீசாரின் தயவு தேவை என்பதால், காவல் துறை கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.